<u>IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM</u>

OS. 90/2018

Deposition of Witness : PW 6

Name : பரணி (வயது – 48)

Father's Name /W/o : க/பெ கோவிந்தசாமி

Religion : இந்து

Caste : –

Calling : –

Address : வீரகோயில்

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 08.09.2025.

## <u>குறுக்கு விசாரணை</u>

1. வழக்கு தாக்கல் செய்த வாதி சோகமுத்து அம்மாள் என் தாயார் என்றால் சரிதான். வாதி திருத்தணி தாலுகா சரஸ்வதி நகர் எல்லையம்மான் கோயில் தெருவில் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். தாவா சொத்து அரக்கோணம் தாலுகா தணிகைபோளூர் கிராமம் மதுரா அல்லியப்பன் தாங்கலில் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து வீடு என்றால் சரிதான். பிரதிவாதி ராமச்சந்திரன் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். பிரதிவாதி தாவா சொத்திலிருந்து காலி செய்ய வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

2. பிரதிவாதிக்கு தாவா சொத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரிதான். என் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரம் யார் சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால் என் தாயார் சொல்லி தயார் செய்யப்ட்டது. என் பிரமாண பத்திரத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு நேரிடியாக தெரியாது என்றால் சரியல்ல. என் தந்தை செட்டில்மெண்ட் யார் பெயரில் எழுதி வைத்தார்

என்றால் என் தயார் பெயரில் எழுதி வைத்தார். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் போடவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி ராமச்சந்திரன் தாவா சொத்தை வாங்க என் தந்தையுடன் ஒப்பந்தம் போட்டார் என்றால் சரிதான். மேற்படி ஒப்பந்தத்தில் எவ்வளவு தொகை பேசி முடிவு செய்யப்பட்டது என்றாலும் எந்த தேதியில் ஒப்பந்தம் போடப்பட்டது என்றால் 1 லட்சத்திற்கு பேசி முடிவு செய்தார்கள் ரூ. 20000 முன்பனமாக கொடுத்தார் ஆனால் திரும்ப வாங்கிவிட்டார். 12.07.1999 தேதியில் ஒப்பந்தம் போடப்பட்டது.

3. கிரைய ஒப்பந்தம் போடும்போது நான் உடன் இல்லை என்றாலும் மேற்படி ஒப்பந்தத்திலும் நான் சாட்சி கையொப்பம் போடவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் முன்பணம் கொடுத்து திரும்ப வாங்கிய விபரம் என் பிரமாண பத்திரத்தில் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி ரூ. 20000 முன்பணத்தை திரும்ப பெற்றதை நான் நேரில் பார்த்தேனா என்றால் இல்லை. என் தந்தை முன்பணம் 20000 திரும்ப கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனக்கு கிரையம் ஒப்பந்தம் பற்றி நேரிடையாக தெரியாது என்றாலும் என் தாய் மற்றும் தந்தை சொல்லிற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் பிரமாண பத்திரத்தில் தெரிவித்துள்ள அனைத்து சங்கதிகளும் பொய்யான சங்கதிகள் என்றால் சரியல்ல.